**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**
**முன்னிலை : திரு M. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி
திருவள்ளுவர் ஆண்டு 2057 பராபவ வருடம் ஆடித் திங்கள் 28ம் நாள்
2026ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13ம் நாள் வியாழக்கிழமை
*****

**EA.No. 14/2026 in EA.No. 05/2022 in EP.No. 130/2018 in OS.No.223/2010**

1. கமலா
2. ஜெயபால் **...மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/ மனுதாரர்கள்/வாதிகள்**

**...எதிர்...**

கணேசன் **...எதிர்மனுதாரர்/மனுதாரர்/ எதிர்மனுதாரர்/3ம் பிரதிவாதி**

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 04.08.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S. சுந்தரய்யா அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. R. கார்த்திக்ராஜன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரையைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்

**உத்தரவு**

மனுதாரர்கள் தரப்பில் ஆவணங்கள் தாக்கல் செய்ய ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து அவற்றை ஏற்று குறியீடு செய்ய அனுமதி அளித்து உத்தரவிடக்கோரி இம்மனு உ.வி.மு.ச. கட்டளை 7 விதி 14(2)–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்**

**(1.1)** மனுதாரர் அசல் வழக்கில் 2ம் வாதி என்றும், 1ம் மனுதாரர் அவரது



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.08.13 16:41:03 +0530

மனைவி என்றும், மேற்படி வழக்கில் தீர்ப்பாணை படி சொத்து வசமாக மனுதாரர், எதிர்மனுதாரர் மற்றும் சிலர் மீது நிறைவேற்று மனு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளதாகவும், அதில் இடைமனுவாக எதிர்மனுதாரர் கோரிக்கை மனு தாக்கல் செய்துள்ளார் என்றும், அதில் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை முடிக்கபட்டுள்ளதாகவும்,

**(1.2)** இந்த நிலையில் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்ய சில முக்கிய ஆவணங்கள் கொடுத்துள்ளதாகவும், அவை தற்போது தான் தேடிய போது கிடைத்ததாகவும், மனுதாரர் வேண்டுமென்றோ அலட்சியமாகவோ மேற்படி ஆவணங்களை முன்பே தாக்கல் செய்யாமல் இருக்கவில்லை என்றும், அவை மிகவும் முக்கியமான ஆவணங்கள் என்றும்,

**(1.3)** எனவே, மனுதாரர் தரப்பில் ஆவணங்கள் தாக்கல் செய்ய ஏற்பட்ட காலதாமத்தை மன்னித்து அவற்றை ஏற்று குறியீடு செய்ய அனுமதி அளித்து உத்தரவிடக்கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2. எதிர்மனுதாரர்/மனுதாரர்/எதிர்மனுதாரர்/3ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆட்சேபணை குறிப்பாணையின் சுருக்கம்:</u>**

**(2.1)** மனுதாரர்கள் ஆவணங்களை உரிய காலத்தில் தாக்கல் செய்யாததற்கு சரியான காரணத்தை மனுவில் குறிப்பிட்டு கூறவில்லை என்றும், மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் எந்த விதத்தில் வழக்கிற்கு தொடர்புடையது என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றும்,

**(2.2)** மேற்படி நிறைவேற்று மனுவில் நல்ல கட்சி இல்லாத மனுதாரர்கள் வேண்டுமென்றே ஆவணங்களை குறியீடு செய்யாமல் விட்டுவிட்டு, மேற்படி மனு எதிர்மனுதாரர்கள் தரப்பில் மற்றொரு சாட்சிக்காக போட்டப்பட்டுள்ள நிலையில், மேற்படி மனுவை காலம் கடத்தும் நோக்கில் இந்த வழக்கிற்கு தேவையற்ற ஆவணங்களை தாக்கல் செய்து குறியீடு செய்ய RW1ஐ Recall செய்ய வேண்டுமென தாக்கல் செய்துள்ள இம்மனு தள்ளுபடிக்கு அருகதையாக



Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.08.13 16:41:11 +0530

CHANDRAMOHAN M

உள்ளது என்றும்,

**(2.3)** மேற்படி மனுவில் RW1ஐ இந்த எதிர்மனுதாரர் முழுமையாக குறுக்கு விசாரணை செய்து முடித்துவிட்ட பிறகு அதில் விடுபட்ட இடைவெளியை பூர்த்தி செய்யும் நோக்கில் RW1ஐ குறுக்கு விசாரணையை சீர்குலைக்கும் நோக்கில் மீண்டும் Recall செய்து விசாரணை செய்ய வேண்டுமென கோருவது எதிர்மனுதாரர் கட்சியை வலுவிழுக்க செய்யும் செயல் என்றும், இதனால் எதிர்மனுதாரருக்கு பெருத்த கஷ்டம் ஏற்படும் என்றும்,

**(2.4)** எனவே, இம்மனுவை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடக்கோரியும் ஆட்சேபணை குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை</u>**

3. மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கதக்கதா?

4. இம்மனுவில் மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் இரு தரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>5. தீர்வு:</u>**

(i) இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது.

(ii) சொத்தை வசம் எடுக்க வேண்டி மனுதாரர்கள், எதிர்மனுதாரர் மீது நிறைவேற்று மனு தாக்கல் செய்துள்ளனர்.

(iii) இம்மனுவானது மனுதாரர்கள் தரப்பில் ஆவணங்கள் தாக்கல் செய்ய ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து அவற்றை ஏற்று குறியீடு செய்ய அனுமதி அளித்து உத்தரவிடக்கோரி உ.வி.மு.ச. கட்டளை 7 விதி 14(2)–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(iv) மனுதாரர்கள் தரப்பில் அசல் வழக்கின் நிறைவேற்று மனுவில் இடைமனுவாக எதிர்மனுதாரர் கோரிக்கை மனு தாக்கல் செய்து, அதில் மனுதாரர்



CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.08.13 16:41:18 +0530

தரப்பு குறுக்கு விசாரணை முடிக்கபட்டுள்ள நிலையில், மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்ய சில முக்கிய ஆவணங்கள் கொடுத்துள்ளதாகவும், அவை தற்போது தான் தேடிய போது கிடைத்ததாகவும், அவை மிகவும் முக்கியமான ஆவணங்கள் என்றும், எனவே, மனுதாரர் தரப்பில் ஆவணங்கள் தாக்கல் செய்ய ஏற்பட்ட காலதாமத்தை மன்னித்து அவற்றை ஏற்று குறியீடு செய்ய அனுமதி அளித்து உத்தரவிடக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(v) எதிர்மனுதாரர் தரப்பில் நிறைவேற்று இடைமனுவில் RW1ஐ இந்த எதிர்மனுதாரர் முழுமையாக குறுக்கு விசாரணை செய்து முடித்துவிட்ட பிறகு, அதில் விடுபட்ட இடைவெளியை பூர்த்தி செய்யும் நோக்கில் RW1 குறுக்கு விசாரணையை சீர்குலைக்கும் நோக்கில் மீண்டும் Recall செய்து விசாரணை செய்ய வேண்டுமென கோருவது எதிர்மனுதாரர் கட்சியை வலுவிழுக்க செய்யும் செயல் என்றும், எனவே, இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

மனுதாரர்கள் தரப்பில் மனுவில் கூறியுள்ள காரணங்கள் போதுமானதாக இல்லையெனினும், நீதியின் நலன் கருதி மனுவினை ஏற்றுக்கொள்ளலாம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. இதனால் வழக்கின் விசாரணை எந்த விதத்திலும் பாதிக்கப்படுவதில்லை. இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு எவ்விதமான பாதிப்பும் ஏற்பட போவதில்லை. மேலும் இது விசாரணை நீதிமன்றமாக இருப்பதால், தரப்பினர்களுக்கு உரிய வாய்ப்பு கொடுத்து அதன் பின் வழக்கில் தீர்வு காண்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று கருதி மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவது என்று முடிவு செய்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

**இறுதியில்,** இம்மனு அனுமதிக்கப்டுகிறது. செலவுத்தொகை இல்லை.



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.08.13 16:41:28 +0530

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2026-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.08.13 16:41:36 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**

<u>**பின் இணைப்பு**</u>

| | |
|---|---|
| <u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்</u> | - இல்லை - |
| <u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u> | - இல்லை - |
| <u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u> | - இல்லை - |
| <u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u> | - இல்லை - |

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.08.13 16:41:45 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**

**Fair/Rough Order**

**EA.No. 14/2026 in**
EA.No. 05/2022 in
EP.No. 130/2018 in
OS.No.223/2010
Dated: 13.08.2026.